WSF 2024 – NEPAL
Another World is Possible
TAMILNADU

# தமிழ்நாடு சமூக மாமன்றம்
# TAMILNADU SOCIAL FORUM

## உலக சமூக மாமன்றம் – தமிழ்நாடு
## WORLD SOCIAL FORUM - T.N.



**28.10.2023 - Saturday**

Patrician College of Arts and Science, Adayar, Chennai - 20

## அன்பார்ந்த தோழர்களே வணக்கம்!

தமிழ்நாடு சமூக மாமன்றம் வருகின்ற சனிக்கிழமை அக்டோபர் மாதம் 28ஆம் தேதி சென்னை அடையாறில் உள்ள Patrician கல்லூரியில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடக்கவிருக்கிறது. தமிழ்நாடு சமூக மாமன்ற ஒருங்கிணைப்பு குழுவின் சார்பாக உங்கள் அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**தமிழ்நாடு சமூக மாமன்ற நிகழ்வுகள்**

| | | |
|---|---|---|
| **காலை 7** | **மணி முதல் பதிவு செய்யும் இடம்** | B - பிளாக் |
| **காலை 9-11 மணி வரை** | **கலை நிகழ்ச்சிகள்.** | (OAT) B - பிளாக் அருகாமையில் உள்ள திறந்தவெளி அரங்கம். |
| **காலை 11-1 மணி வரை** | **துவக்க நிகழ்வு (Auditorium)** | B - பிளாக் ஆடிட்டோரியம். |
| **மதியம் 1-5 மணி வரை** | **கருத்து பட்டறைகள்** | E - பிளாக் மற்றும் D - பிளாக்கில் உள்ள வகுப்பறைகள். |
| **மாலை 4-5 மணி வரை** | **கலை நிகழ்ச்சிகள்** | B - பிளாக் அருகாமையில் உள்ள (OAT) திறந்த வெளி அரங்கம். |
| **மாலை 5-6 மணி வரை** | **தமிழ்நாடு சமூக மாமன்றத்தின் நிறைவு நிகழ்வு** | B - பிளாக் அருகாமையில் உள்ள (OAT) திறந்த வெளி அரங்கம். |
| **1-5 மணி வரை** | **ஆவணப்படம்** | D - பிளாக் முதல் தளம். |
| **காலை 9-5 மணி வரை** | **புகைப்படம் மற்றும் புத்தகக் கண்காட்சி** | D - பிளாக் தரைத் தளம். |

**உணவு மற்றும் பாரம்பரிய தின்பண்ட கூடம்**
**A - பிளாக்கின் பின்புறம் அமைந்துள்ளது.**

குடிநீர் எல்லா பிளாக்குகளிலும் கிடைக்கும். நீங்கள் தவறாமல் உங்கள் தண்ணீர் குடுவைகளை கொண்டு வர மறக்க வேண்டாம்.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வருகிறவர்கள் தங்களுடைய நாலு சக்கர வண்டிகளை கோட்டூர்புரம் பறக்கும் ரயில் நிலையத்தின் அருகில் நிறுத்தும்படி கேட்டுக்கொள்கிறோம். மேலும் இரண்டு சக்கர வாகனங்களில் வருபவர்களுக்கு வாகனங்கள் நிறுத்துவதற்காக கல்லூரி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**கருத்து பட்டறை மற்றும் புகைப்பட கண்காட்சி நடத்துபவர்களுடைய தனி கவனத்திற்கு:**

உங்களுடைய எல்லா பதாகைகளும் துணியிலோ அழியும் பொருளிலோ அமைய வேண்டும். மற்ற வகையான பதாகைகளுக்கு அனுமதி இல்லை. கயிறுகளைத் தவிர மற்ற வகையான பொருட்களை சுவர்களிலோ வேறு இடங்களிலோ பயன்படுத்தக்கூடாது.

**தமிழ்நாடு சமூக மாமன்றத்தில் பங்கேற்க வருபவர்களின் தனி கவனத்திற்கு :**

- ▶ Patrician கல்லூரி வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க நாம் ஒவ்வொருவரும் உதவுவோம்.
- ▶ தேவையற்ற பொருட்களை களைய குப்பை தொட்டிகளை பயன்படுத்துவோம்.
- ▶ அனைவருக்கும் தேவையான குடிநீருக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்த குடிநீரை பயன்படுத்த ஒவ்வொருவரும் உங்கள் சொந்த குடிநீர் குடுவைகளை தவறாமல் கொண்டு வாருங்கள்.
- ▶ குறைந்த விலையில் உணவுக்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

## தனிநபர் பதிவு கட்டணம் ரூபாய் 100.

கருத்து பட்டறைகள் ஏற்பாடு செய்துள்ளவர்கள் அதற்கான பதிவு கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தவும்.

நாம் அனைவரும் இணைந்து இந்த முயற்சியை வெற்றிகரமாக நடத்துவோம்.

நன்றி!

இப்படிக்கு

**தமிழ்நாடு சமூக மாமன்ற ஒருங்கிணைப்பு குழு.**

# உலக சமூக மாமன்றம்

## ( World Social Forum )

2001 ஆம் ஆண்டு தென்னமெரிக்காவிலுள்ள பிரேசில் நாட்டில் உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல் ஆகியவற்றுக்கு எதிராக பெரிய அளவில் பல நாடுகளைச் சேர்ந்த சமூக இயக்கங்கள் ஒன்றுகூடின. 'மாற்று உலகம் சாத்தியமே' என்ற முழக்கத்தை முன்வைத்தன. வல்லரசு நாடுகளின் நலன்களைக் காக்க, கார்ப்பரேட் ஆதிக்கத்தை வலுப்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 'உலக பொருளாதார மன்றம்' (World Economic Forum ) கூடிவருகிறது. அதேநேரத்தில், அதற்கு எதிராக உலக நாடுகள் அனைத்திலும் உள்ள 'சமூக இயக்கங்கள்' கூடி, மாற்று உலகத்திற்கான செயல்பாடுகளைக் கட்டமைக்க உறுதிபூண்டன. அதற்கு 'உலக சமூக மாமன்றம்' என்று பெயரிடப்பட்டது. பிரேசில் நாட்டின் பெரிய தொழிற்சங்கத் தலைவராக இருந்த லூலா அன்று தலைமை தாங்கினார்.

2003 ஆம் ஆண்டு 'ஆசிய பசிபிக் சமூக மாமன்றம்' ஹைதராபாத் நிஜாம் கல்லூரி வளாகத்தில் கூடியது. 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். பல்வேறு சமூக அமைப்புகளின் கருத்தரங்குகள் ஒரேநேரத்தில் பல்வேறு அரங்குகளில் நடத்தப்பட்டன.

2003 ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு சமூக மாமன்றம்' மதுரை 'லேடி டோக்' கல்லூரியிலும், சென்னை 'லயோலா கல்லூரி'யிலும் 'குட் ஷெப்பர்ட்' பள்ளி வளாகத்திலும் நடத்தப்பட்டது. கருத்தரங்குகள், பேரணிகள் ஆகியவற்றில் பல நூறு பேர் பங்குகொண்டனர்.

2004 ஆம் ஆண்டு 'உலக சமூக மாமன்றம்' மாநாடு இந்தியாவில் மும்பையில் நடத்தப்பட்டது. உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் சமூக இயக்கத்தார்கள் வந்திருந்து கருத்தரங்குகளும் கலைநிகழ்ச்சிகளும் பேரணிகளும் நடத்தினர். ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட சமூக செயற்பாட்டாளர்கள் மும்பையில் கலந்துகொண்டனர். இடதுசாரி வெகுஜன அமைப்புகள் முழுவீச்சில் பங்குகொண்டனர். 2006 ஆம்

ஆண்டில் ‘இந்திய சமூக மாமன்றம்’ மாநாடு டில்லியில் கூடியது.

2002, 2005 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டிலும் 2006 ஆம் ஆண்டில் வெனிசுலா, மாலி, பாகிஸ்தானின் கராச்சியிலும் நடந்தது. 2007 ஆம் ஆண்டில் கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் நடந்தது. 2009, 2010 ஆம் ஆண்டுகளில் பிரேசிலில் நடந்தது. 2011 ஆம் ஆண்டில் செனகல் நாட்டில் நடந்தது. 2012 ல் பிரேசில் நாட்டிலும் 2013, 2015 ஆம் ஆண்டுகளில் துனிஸ், 2016 ல் மாண்ட்ரில், 2018 ல் சல்வேடார் ஆகிய நாடுகளில் நடந்தன.

2024 பிப்ரவரி மாதம் 15 முதல் 19 ஆம் தேதி வரை ‘உலக சமூக மாமன்றம்’ மாநாடு நேபாள நாட்டில் காத்மண்டு நகரத்தில் 170 நாடுகளின் சமூக அமைப்புகள் பங்குகொண்டு நடக்கவுள்ளது. ‘இந்திய சமூக மாமன்றம்’ 2023 டிசம்பர் 2, 3, 4 தேதிகளில் பாட்னாவில் நடக்கவிருக்கிறது.

‘தமிழ்நாடு சமூக மாமன்றம்’ 2023 அக்டோபர் 28 ஆம் தேதி சென்னை அடையாறு ‘பேட்ரிசன் கல்லூரி’யில் நடக்கவிருக்கிறது. கட்சி சார்பற்ற சமூக இயக்கங்கள் கணிசமாக பங்குகொள்கின்றனர். கட்சி சார்பற்ற அரசியல் அணிதிரள்தலில் பெயர்பெற்ற தமிழ்நாட்டில் 2017 ஆம் ஆண்டின் ஜல்லிக்கட்டு எழுச்சி, அதற்குப் பிறகு தொடர்ந்த நெடுவாசல், கதிராமங்கலம் ஆகியவற்றின் ஹைட்ரோகார்பன் எதிர்ப்பு இயக்கங்களும் ஒன்றரை லட்சம் மக்கள் வரை அணிதிரட்டிய ‘ஸ்டெர்லைட்’ ஆலை எதிர்ப்பியக்கம் ஆகியவை தமிழ்நாட்டில் முன்மாதிரிகளாக நமக்கு சான்று கூறுகின்றன. பெண்கள் இயக்கத்தினர், தலித் இயக்கத்தினர், பழங்குடி மக்கள் அமைப்புகள், மீனவர் சங்கங்கள், திருநங்கையர் திருநம்பியர் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் போன்ற பல அமைப்புகள் சிறப்பாகப் பங்களிப்பு செலுத்துகின்றனர்.

**ஆகவே, இந்த அணிதிரளலில் தாங்களும் தங்கள் இயக்கமும் பங்குகொண்டு, கார்ப்பரேட்டிசத்திற்கும் மதவாதத்திற்கும் சாதியவாதத்திற்கும் மாற்று உலகத்தை உருவாக்க வாரீர்! வாரீர்!! என அழைக்கின்றோம்!!!**

# WSF- கடந்து வந்த பாதை












FISHER MOVEMENTS CO-ORDINATION OF TAMIL
Constituent of W.S.F.- 04. MUMBAI


SOUTH INDIAN FISHERMEN'S
WELFARE ASSOCIATION
Regd.No. 274/2005
CHENNAI (TAMILNADU)
தென்னிந்திய மீனவர் நல சங்கம்


தமிழ்நாடு சமூக மாமன்றம்
பொதுக்கூட்ட
13.08.2006 16:42


உலக சமூக மாமன்றம்
தமிழ்நாடு


உலக சமூக மாமன்றம் WSF தமிழ் மாநில மாநாடு
2004
27-29 டிசம்பர் 2003 சென்னை
ANOTHER WORLD
IS POSSIBLE
மாற்று உலகம் சாத்திய
TWO WHEELER PARKING


சமத்துவம்
பெண் விடுதலை
மதுரை மாவட்டம்
13.08.2006 16:16

# தமிழ்நாடு சமூக மாமன்றம்

**நேரம்: அக்டோபர் 28, 2023 இடம் : பேட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை**

| வரிசை எண் | அமைப்பின் பெயர் | அறை எண்ணிக்கை | தலைப்பு | அறை ஒதுக்கீட்டு விவரம் | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு அரசு பொது சுகாதார துறை செவிலியர் கூட்டமைப்பு | 200 | பொது சுகாதார துறையில் உலக மயமாக்கலின் தாக்கம் | பிஎம்எஸ் ஹால் E பிளாக் இரண்டாவது தளம் | **13.00 – 14.30** |
| 2 | மீனவ மக்கள் பட்டியலின அரசாணை குழு | 200 | பழங்குடி பட்டியல் மீனவர் சேர்க்கை | பிஎம்எஸ் ஹால் - E பிளாக் இரண்டாவது தளம் | **14.30 – 16.00** |
| 3 | தென்னிந்திய வண்ணத்தார் மகா ஜன கூட்டமைப்பு தமிழ்நாடு வண்ணார் குல ஒருங்கிணைப்புக்குழு | 200 | சலவை தொழிலார்கள் தூய்மை பணியாளர்கள் இல்லையா ?? பட்டியல் பிரிவில் இட ஒதுக்கீட்டில் அவர்களுக்கு இடம் இல்லையா?? | பிஎம்எஸ் ஹால் - E பிளாக் இரண்டாவது தளம் | **16.00 – 17.00** |
| 4 | PCVC | 150 | குடும்ப வன்முறையும் அதை சார்ந்த உதவிகளும் | கான்பரன்ஸ் ஹால் (C பிளாக் முதல் தளம்) | **13.00 – 14.30** |

| வரிசை எண் | அமைப்பின் பெயர் | அறை எண்ணிக்கை | தலைப்பு | அறை ஒதுக்கீட்டு விவரம் | **நேரம்** |
|---|---|---|---|---|---|
| 5 | அருந்ததியர் கூட்டமைப்பு | 150 | அருந்ததியர் உரிமை மீட்பு | கான்பரன்ஸ் ஹால் (C பிளாக் முதல் தளம்) | **14.30 – 16.00** |
| 6 | திருநெல்வேலி மாமன்றம் | 150 | உணவு உத்தரவாதம் | கான்பரன்ஸ் ஹால் (C பிளாக் முதல் தளம்) | **16.00 – 17.00** |
| 7 | கன்னியாகுமரி மாமன்றம் | 120 | இயற்கை வளங்களின் பாதுகாப்பு | டெலானி ஹால் (E பிளாக் தரைத்தளம்) | **13.00 – 14.30** |
| 8 | திருவண்ணாமலை பெண்கள் இணைப்புக்குழு | 120 | சிறுதானியம் மற்றும் பெண்கள் | டெலானி ஹால் (E பிளாக் தரைத்தளம்) | **14.30 – 16.00** |
| 9 | களஞ்சியம் அமைப்பு சாரா தொழிலாளர் சங்கம் | 120 | அமைப்புசாரா தொழிலாளர்களின் உரிமைகள் | டெலானி ஹால் (E பிளாக் தரைத்தளம்) | **16.00 – 17.00** |
| 10 | மதுரை மாமன்றம் | 100 | சாதி மோதல்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் | ஃபின்டன் ஹால் (C பிளாக் தரை தளம்) | **13.00 – 14.30** |
| 11 | TNCRW | 100 | குழந்தைகள் உரிமைகள் | ஃபின்டன் ஹால் (C பிளாக் தரை தளம்) | **14.30 – 16.00** |
| 12 | ஸ்டெர்லைட் நில மீட்பு இயக்கம் | 100 | தூத்துக்குடி ஸ்டெர்லைட் நில மீட்பு | ஃபின்டன் ஹால் (C பிளாக் முதல் தளம்) | **16.00 – 17.00** |

| வரிசை எண் | அமைப்பின் பெயர் | அறை எண்ணிக்கை | தலைப்பு | அறை ஒதுக்கீட்டு விவரம் | **நேரம்** |
|---|---|---|---|---|---|
| 13 | நீல்கிரீஸ் மாமன்றம் | 50 | பேரழிவுகள் மற்றும் சவால்கள் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 88 | **13.00 – 14.30** |
| 14 | சேலம் மாமன்றம் | 50 | ஆதிவாசி உரிமைகள் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 89 | **13.00 – 14.30** |
| 15 | சமூக ஜனநாயக தொழிற்சங்கம் (SDTU) | 50 | இந்திய தொழிலாளர் சட்டங்களும் இன்றைய தொழிலாளர் நிலைமைகளும் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை- 93 | **13.00 – 14.30** |
| 16 | தென்னிந்திய மீனவர் நலச் சங்கம் | 50 | காலநிலை மாற்றம் மற்றும் CZMP வரைபடங்கள் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 94 | **13.00 – 14.30** |
| 17 | வேலூர் மாமன்றம் | 50 | பெண்களும் மற்றும் நில உரிமையும் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை- 95 | **13.00 – 14.30** |
| 18 | காஞ்சிபுரம் மாமன்றம் | 50 | பருவநிலை மாற்றம் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 97 | **13.00 – 14.30** |

| வரிசை எண் | அமைப்பின் பெயர் | அறை எண்ணிக்கை | தலைப்பு | அறை ஒதுக்கீட்டு விவரம் | **நேரம்** |
|---|---|---|---|---|---|
| 19 | தமிழ்நாடு நாட்டின் நாய்கள் பேரவை | 50 | நாட்டு நாய்களை பாதுகாப்போம். | E பிளாக் தரைத்தள வகுப்பு அறை - 88 | **14.30 – 16.00** |
| 20 | சுபிக்ஷம் கட்டுமான, அமைப்புசாரா தொழிலாளர் சங்கம். | 50 | அமைப்புசாரா தொழிலாளர்களின் உரிமைகள் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 89 | **14.30 – 16.00** |
| 21 | மத்திய மாநில SC/ ST அரசு ஊழியர்கள் & மக்கள் கூட்டமைப்பு | 50 | பின்னடைவு காலி பணியிடங்களும் பட்டியலின உரிமைகளும் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை- 93 | **14.30 – 16.00** |
| 22 | அம்பேத்கர் பொதுவுடைமை முன்னணி | 50 | உலகமயமாக்கலும் நீர்வள கொள்கையும் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 94 | **14.30 – 16.00** |
| 23 | மதுரை பெண்கள் இணைப்புக்குழு | 50 | பாலியல் வன்முறை | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை- 95 | **14.30 – 16.00** |
| 24 | இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம் | 50 | தூய்மை பணியாளர் சந்திக்கும் சவால்கள் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 97 | **14.30 – 16.00** |
| 25 | திருவள்ளூர் மாமன்றம் | 50 | புதிய கல்விக் கொள்கை | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 88 | **16.00 – 17.00** |


| வரிசை எண் | அமைப்பின் பெயர் | அறை எண்ணிக்கை | தலைப்பு | அறை ஒதுக்கீட்டு விவரம் | **நேரம்** |
|---|---|---|---|---|---|
| 26 | தெற்காசிய மீனவர் தோழமை | 50 | ஆழ்கடல் மீனவர் பிரச்சனைகளும் தீர்வுகளும் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 89 | **16.00 – 17.00** |
| 27 | விசைப்படகு உரிமையாளர் சங்கம் | 50 | உலகமயமாக்களால் பாதிக்கப்படும் மீனவர் வாழ்வு நிலை | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை- 93 | **16.00 – 17.00** |
| 28 | இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம் | 50 | SC & ST மக்களின் மறுக்கப்படும் உரிமைகள் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 97 | **16.00 – 17.00** |
| 29 | RTE FORUM தமிழ்நாடு | 50 | RTE மற்றும் தற்போதைய கல்வி | D பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 58 | **13.00 – 14.30** |
| 30 | தமிழர் தேசியக் கிறித்தவர் இயக்கம் | 50 | மொழி வழி தேசிய இனங்களின் விடுதலை | D பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை - 61 | **13.00 – 14.30** |
| 31 | தமிழ்நாடு சீர்மரபினர் நலச்சங்கம் | 50 | புறக்கணிக்கப்பட்ட பூர்வ பழங்குடி மக்களின் நிலை | D பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை 58 | **14.30 – 16.00** |
| 32 | குடிமை சமூக கூட்டமைப்பு | 50 | குடிமை சமூகங்களை ஒன்றினைத்தல் | D பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை 61 | **14.30 – 16.00** |
| 33 | விவசாயிகள் தொழிலாளர்கள் முன்னேற்றக் கழகம் (VTMB) | 50 | மலையக தமிழகத்தினரின் போராட்டம் | E பிளாக் தரைத்தளம் வகுப்பு அறை 94 | **16.00 – 17.00** |

இந்திய சமூக மாமன்றம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 - 04 தேதி வரை பீகார் மாநிலத்தில் உள்ள பாட்னாவில் நடக்க விருக்கிறது. தமிழகத்தில் இருந்து கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் பாட்னாவையோ தன்பூரையோ அடைந்தாள் அங்கிருந்து பேருந்து மூலமாக மாநாடு நடக்கும் இடத்திற்கு நம்மை அழைத்து செல்ல ஏற்பாடு செய்வார்கள் மேலும் உங்களுடைய தனி நபர் பதிவையோ நிறுவன பதிவையோ கீழ்கண்ட வளைதளத்தில் பதிவு செய்யவும் மேலும் பாட்னா மாநாட்டில் கருத்தரங்கு நடத்த இருப்பவர்கள் **wsf.india.2023@gmail.com** என்ற மின் அஞ்சல் முகவரிக்கு தகவல் அனுப்பவும்.

# WSF - INDIA - WEBSITE
# https://wsf-india.in

உலக சமூக மாமன்றம் 2024 நேபாளில் உள்ள காட்மண்டுர் நகரில் 2024 பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை நடக்க இருக்கிறது . கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழ் கண்ட இணைய தளத்தில் தொடர்பு கொண்டு தனிநபரையோ நிறுவனத்தையே பதிவு செய்து மற்ற விவரங்களை அறியலாம்.

## http://www.wsf2024nepal.org




# தமிழ்நாடு சமூக மாமன்றம்
# TAMILNADU SOCIAL FORUM
## உலக சமூக மாமன்றம் – தமிழ்நாடு
## WORLD SOCIAL FORUM - T.N.

**Patrician College of Arts and Science, Adayar, Chennai - 20**